**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
**பொது அலுவல்கள் பிரிவு**
**தொ.பே.: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070**
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20190517

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோவின் அறிக்கை**

மே 16, 2019

**வெசாக் தினம்**

மே 18ஆம் திகதி வெசாக் தினத்தை கொண்டாடும் அனைவருக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்த்துக்களை அமெரிக்க மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பௌத்தத்தின் ஸ்தாபகரான கௌதம புத்தரின் நினைவாக கொண்டாடுவதற்கு பௌத்த சமூகங்கள் உலகம் முழுவதிலும் ஒன்றுபட்டுள்ள நிலையில், இரக்கம், கருணை மற்றும் அமைதியின் பண்புகளை நாம் மதிக்கிறோம்.

அமெரிக்காவிலுள்ள பௌத்த சமூகத்தினர் எமது நாட்டினதும் எமது மக்களினதும் வலிமைக்கு பங்களிப்பு செய்வதுடன், இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக பௌத்தம் உலகுக்கு அளிக்கும் பங்களிப்பானது எமது கலாசாரத்தையும் வரலாற்றையும் செழிப்பாக்கியுள்ளது.

அனைவருக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வெசாக் தின வாழ்த்துக்கள்.